2002 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-20

விசாரணை பல கோணங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இறந்து போன சுமதியின் சகோதரர்கள் மற்றும் அவரை மணந்து அவரிடமிருந்து விவாகரத்துப் பெற்ற கணவர் ஆகியோரிடம் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதன்முதலில் சம்பவ இடத்தைப் பார்த்த திரு. முனுசாமி இதுவரை போலீஸாரின் விசாரணைக்கு அகப்படவில்லை. இதனால் அவரைக் கண்டுபிடித்து விசாரணை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் மற்றும் இதர மூத்த காவல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணை அதிகாரிகளுக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். இறந்து போன சுமதியின் பிரேதப் பரிசோதனை 3-4-2002 அன்று சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் நடைபெற்றுள்ளது. சுமதியின் உடற்கூறுகள் வேதியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த வழக்கில் துரிதமாகத் துப்புத் துலக்கி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, 3 உதவி ஆணையர்கள் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தீவிரப் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குற்றவாளிகள் விரைவில் பிடிக்கப்படுவார்கள்.

இதுபோன்ற ஆதாயத்திற்கான கொலைச் சம்பவங்களும், கொலைக் குற்றங்களும் நடைபெறுவதைத் தடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்க சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு நான் ஆணையிட்டுள்ளேன். குற்றங்கள் நிகழாமல் தவிர்க்கும் பொருட்டு, ஏற்கெனவே குற்ற நடத்தையுடையவர்கள் பலர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் பிடிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், இது மாதிரியான குற்றங்கள் நிகழாமல் தடுக்க, மிகவும் விழிப்புடன் இருந்து பணியாற்றுமாறு காவல் துறையினருக்குத் தக்க அறிவுரை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

(ஆ) எழும்பூர் மார்ஷல் சாலை புனித அந்தோணியார் தேவாலயத்தில் 29-3-2002 அன்று உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழும்பூர் தொகுதியில் மார்ஷல் சாலையில் அமைந்துள்ள புனித அந்தோணியார் தேவாலயத்தில்

கடந்த மார்ச் 29 ஆம் தேதியன்று நான்கு உண்டியல்கள் கொள்ளை அடிக்கப்பட்டது குறித்து விவாதிக்க தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி ஆகியோர், ஒத்திவைக்கக் கோரி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் திரு. பரிதி இளம்வழுதி அவர்களைச் சுருக்கமாக விளக்குமாறு அழைக்கிறேன்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியிலுள்ள மார்ஷல் சாலையிலே இருக்கின்ற புனித அந்தோணியார் கோயிலிலே உண்டியல் கொள்ளை நடைபெற்று இருக்கிறது. இந்தக் கொள்ளை திட்டமிட்டே நடத்தப்பட்டதுபோலத் தெரிகிறது. காரணம், பெரும்பாலும் தேவாலயங்களிலே தினந்தோறும் மணி அடிப்பார்கள். ஆனால், அந்தப் புனித வெள்ளிக்கிழமையன்று மணி அடிக்க மாட்டார்கள். இதை நன்கு தெரிந்த கொள்ளையர்கள் — அன்று இரவு முழுவதும் ஜெபக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது — கூட்டத்தோடு கூட்டமாக ஊடுருவி உள்ளே சென்றிருக்கிறார்கள். அதன் பிறகு, அந்த மணி இருக்கின்ற இடத்திலே சென்று அவர்கள் பதுங்கியிருக்கின்றார்கள். பிறகு அவர்கள் கயிற்றின் மூலம் — மக்கள் எல்லாம் வெளியே சென்றுவிட்டு, தேவாலயம் பூட்டப்பட்ட பிறகு, கயிற்றின் மூலம் — இறங்கி அங்கே இரண்டு உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்ஷல் சாலையிலே உள்ள அந்தோணியார் ஆலய உண்டியல் கொள்ளை, அதோடு விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி விளக்குவார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மார்ஷல் சாலையிலே உள்ள அந்தோணியார் ஆலயத்தின் உண்டியல் கொள்ளை அடிக்கப்பட்டது. அதுகுறித்து நீங்கள் விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி அறிக்கை கொடுப்பார்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: ஆக, இது தொடர்பாக, இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2002 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்ஷல் சாலையோடு உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மற்றவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. தொடர்புடைய சம்பவத்தைப் பற்றி அவர் சொன்ன விளக்கத்தைத் தவிர, மற்றவைகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புதுப்பேட்டை, மார்ஷல் சாலையில் உள்ள தூய அந்தோணியார் கத்தோலிக்க கிருத்துவ தேவாலயத்தின் பாதிரியார் திரு. ஏ. விஜய்கிரன் என்பவர் *30-3-2002* அன்று காலை சுமார் *7* மணி அளவில் எழும்பூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்துள்ளார். அந்தப் புகாரில், *29-3-2002* அன்று இரவு, புனித வெள்ளி பிரார்த்தனையை முடித்த பின்பு, இரவு *8-30* மணி அளவில் ஆலயத்தின் கதவுகளை மூடிவிட்டுச் சென்றதாகவும், மறுநாள் *30-3-2002* அன்று காலை *5-00* மணியளவில் தேவலாயத்தின் கதவுகளை ஆலய ஊழியர் திறந்து பார்த்தபோது, ஆலயத்தின் உள்ளிருந்த ஐந்து உண்டியல்கள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் அதில் இருந்த ரூபாய் நோட்டுகள் மட்டும் திருடப்பட்டு இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

முற்பகல் *11-25*

இந்தப் புகாரைப் பெற்றுக்கொண்ட காவல் துறையினர், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் *457* மற்றும் *380*-ன்கீழ், எஃப்-2, எழும்பூர் காவல் நிலைய குற்ற எண் *311/2002* என்ற எண்ணில் வழக்கு ஒன்றினைப் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். உடனடியாகக் கைரேகை நிபுணர்களும், தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்து உள்ளனர். மேலும் மோப்ப நாய்ப் பிரிவின் உதவியும் பெறப்பட்டு, இது தொடர்பாகப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

புலன் விசாரணையில், களவு போன ரூபாய் நோட்டுகளின் மதிப்பு சுமார் *15* ஆயிரம் இருக்கலாம் என்றும், இந்த உண்டியல்கள் மாதம் ஒரு முறை திறக்கப்பட்டு, காணிக்கைப் பணம் சேகரிக்கப்பட்டு வந்தது என்றும் பாதிரியார் தெரிவித்துள்ளார்.

இதற்கென காவல் துறையின் தனிப்படை அமைக்கப்பட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குற்றவாளிகள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று தெரிவித்து அமைகிறேன்.

4. விதி 110-ன்கீழ் அறிக்கை

கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுங்கக் கட்டண வசூல்

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையை நவீனப்படுத்தும் பணி மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதாவது 1992 ஆம் ஆண்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். சமீபத்தில் அதனை மேம்படுத்தும் பணி மற்றும் நவீனப்படுத்தும் பணி ஆகியவை முடிக்கப்பெற்று, இந்தச் சாலை கடந்த 24-3-2002 அன்று முதல் கட்டண விதிப்புடன் மக்கள் உபயோகத்திற்கு விடப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும், அதன் பின்னர், பாண்டிச்சேரி வரையிலும் செல்கின்ற இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை* TIDCO *மற்றும்* Integrated Leasing and Financial Services *ஆகிய இரண்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு உருவாக்கி, இயக்கி, ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தனியார் துறையினால் தொடங்கி முடிக்கப்பட்டு, தற்போது நிருவகிக்கப்பட்டு வரும் பணி ஆகும். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த இந்தச் சாலையின் உரிமையாளரான ஒரு நிறுவனம், இந்தச் சாலையைப் பயன்படுத்துகின்ற வாகன உபயோகிப்பாளர்களிடமிருந்து கட்டண வசூல் மூலம் முதலீட்டினைப் பெறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல் முறையே ஆகும். இதுபோலவே நாட்டின் பல பாகங்களிலும், குறிப்பாக நவீனப்படுத்தப்பட்ட மும்பை-பூனா நெடுஞ்சாலை, நவீனப்படுத்தப்பட்ட வதோதரா-ஹலோல் நெடுஞ்சாலை ஆகியவை*